1972 சனவரி 28]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : *1,000 டன் கொள்ளளவு கொண்ட இரண்டு குளிர் பதன சாதனங்களை ஊட்டியிலுள்ள விஜய நகரம் பண்ணையில் ஒன்றும் மற்றொன்று சென்னையிலும் நிறுவுவதற்கு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.*

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, potatoes are grown in large quantities in the Hosur taluk, next to the Nilgiris. The quality and taste of the potato is very fine and some good potato cultivators there have won prizes. As it is a delicate crop a cold storage plant is absolutely necessary. May I know whether a cold storage plant will be sanctioned for Hosur taluk?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : *தலைவர் அவர்களே, தற்சமயம் இல்லை.*

திரு. எம். தேவராசன் : *தலைவர் அவர்களே, ஊட்டியில் கட்டவிருக்கும் அந்த வேலை எப்பொழுது முடிவடையும் என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : *சமீபத்திலே அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது; விரைவில் வேலை துவங்கும், முடிக்கப் படும்.*

Ennore Thermal Power Station

* 103 Q.—THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether a large quantity of control, production metering and H. V. Bus duct equipments have been purchased for the Ennore Thermal Power Station during 1970-71-72; and

(b) the cost at which they were purchased?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : *(அ) இல்லை.*

(இ) வினா எழவில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி : *தலைவர் அவர்களே, 1970, 71, 72-ம் ஆண்டுகளில் மீட்டர் வழங்கவில்லை என்றால், எப்படி அவை இயங்குகின்றன?*

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : *அப்பொழுது வரவழைக்கப் படவில்லை. புதிதாக வழங்க ஒப்பந்தம் கோரப்பட்டிருக்கிறது.*

Death of electricity worker at Cumbum

* 104 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether an electricity worker died on 24th July 1971 at Cumbum in Madurai District while on duty due to electric shock;

(b) if so, the amount of compensation paid to his family: and

(c) the steps taken to prevent recurrence of such accidents?